தேதி.19.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.145/2022 திருமதி.இந்திரா, க/பெ.மகேந்திரன் (எ) நஞ்சப்பன் வா.சா.2

<u>வா.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு படிக்க தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதி எந்த தேதியில் ஐந்து லட்ச ரூபாய் கடன் கேட்டோம் என்றால் தேதி நினைவில் இல்லை 2015ம் வருடம் கேட்டோம். சொத்தை அடமானம் வைக்க மூலப்பத்திரமோ அசல் பத்திரமோ தேவையில்லை என்றால் நாங்கள் அசல் பத்திரம் மற்றும் மூலப்பத்திரத்தை கொடுத்துள்ளோம். சார்பதிவாளர் அலுவலகம் செல்லும்போது கிரையம் செய்வதற்காகத்தான் சென்ற விவரம் தெரியுமா என்றால் இல்லை. பொதுவாக கிரையமோ அடமானமோ எழுதும்போது சார்பதிவாளர் படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்தீர்களா என்று கேட்பார் என்றால் எங்களிடம் கேட்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6ல் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். அது 1ம் பிரதிவாதிக்கு வாதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். கிரையம் செய்யும் நோக்கத்தோடு தான் பிரதிவாதியிடமிருந்து கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு வாதி, பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் கிரையத்திற்காகத்தான் பணத்தை பெற்றோம் என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல.

கீழ்கண்ட சொத்தை இன்று தங்களுக்கு கிரையம் செய்து கொடுத்து இன்றே தங்களுக்கு சுவாதீனம் செய்து கொடுத்துள்ளேன் என்ற வாசகம் வா.சா.ஆ.6ல் கண்டுள்ளது என்றால் நான் கையெழுத்து செய்தபோது படித்துப்பார்க்காமல் நம்பிக்கையின் பேரில் தான் கையெழுத்து செய்தேன். நான் அடமானத்திற்கு தான் எழுதிக்கொடுத்துள்ளேன். கடன் வாங்கியதற்கு நான் பிரதிவாதியிடம் திருப்பி செலுத்துவதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பழனிச்சாமி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் வழக்கு தாக்கல் செய்தபோது நான் எனது எதிருரை தாக்கல் செய்தபோது பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செலுத்தினேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நான் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுப்பதாக தெரிவித்தார்கள். இந்த வழக்கிலாவது வாங்கிய கடனை நீதிமன்றத்தில் வைப்பீடு செலுத்தினாரா என்றால் இல்லை. பழனிச்சாமி இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபிறகு நான் கொடுத்த அசல்பத்திரங்களை திருப்பிகொடுக்க வேண்டி கேட்டேனாஎன்றால் இல்லை. தாவா சொத்து எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர் இரண்டு கிரையங்கள் மூலமாக பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேலும் எனது கணவரின் சகோதரிகள் அந்த சொத்தின் அவர்களின் உரிமையில்லை என்று எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் சரிதான். மேற்படி மூன்று அசல் ஆவணங்களும் பழனிச்சாமியிடம் தான் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் பழனிச்சாமியிடம் கடன் வாங்கியதாக சொல்வது பொய் என்றும், அவ்வாறு கடனுக்காக அழைத்து சென்று கிரையமாக எழுதிக்கொண்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

12.10.2015ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு எனது கணவர் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்து அன்றே சுவாதீனம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போதும் நாங்கள் தான் இருந்து வருகிறோம். பழனிச்சாமி எங்கு வசித்து வருகிறார் என்றால் தாண்டாம்பாளையம் என்ற ஊரில்வசித்து வருகிறார். அங்கு தான் அவருடைய தோட்டம் உள்ளது. தாவா சொத்தை அவர் சுவாதீனத்தில் இருந்தபோது வீட்டை பூட்டிவிட்டு தோட்டத்திற்கு சென்ற நேரத்தில் நாங்கள் பூட்டை உடைத்து நாங்கள் சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் பழனிச்சாமி அ.வ.எண்.148/2018 என்ற வழக்கு தாக்கல்செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. பட்டாவில் பழனிச்சாமி பெயர் மாறியுள்ளது என்றால் சரிதான். நாங்கள் 1ம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நாங்கள் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.